**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்**.162/2018

பெயர்–திரு.பசுவண்ணா நாள்.02.04.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி அவரது 13 செண்ட் எனது பூமியில் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். 27.01.1995 தேதியிட்ட கிரயப்படி தாவா சொத்து வாதிக்கு பாத்திப்பட்டது என்றால் சரிதான் . தாவா சொத்து புல எண். 305/4 பூமியில் பு.ஏ.1.53 வாதிக்கு பாத்தியமுள்ளது என்றால் சரிதான். மேற்படி பு.ஏ.1.53 கிழபுறம் வாதியின் மனைவி மாதலாம்பிகைக்கு பூமி உள்ளது என்றால் சரிதான். புல எண்.305/4 பூமிக்கு வடபுறம் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமியில் பு.ஏ.1.53 பூமி க.ச.எண்.305/4ல் உள்ளது. தாவா சொத்திற்கு எனது தந்தை பூமிக்கும் மேபுறமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் தடம் உள்ளது என்றால் சரிதான்.

அந்த தடத்தின் வழியாகத்தான் வாதியும், எனது தந்தையும் அவரவர்கள் பூமிக்கு செல்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் பூமிக்கும் வாதி பூமிக்கும் இடையே கிழமேலாக 10 அடி தடம் இருந்தது என்றால் இல்லை 6 அடி தடம் இருந்தது. மேற்படி தடத்தை எனது தந்தை மற்றும் கெம்பம்மாள் மற்றும் நான் சேர்த்து அழித்ததாக வாதி சாந்தமல்லப்பாவின் மனைவி வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம், மேற்படி வழக் கு அ.வ.எண்.71/2013 நாள் 16.03.2016ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின் மேல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்கு A.S.36/2016 வழக்கு கடந்த 01.03.2017ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். தற்போது நிலவியலில் 6 அடி தடம் இல்லை என்றால் சரிதான். அந்த தடத்தையும் சேர்த்து வாதி விவசாயம் செய்து வருகிறார். எந்த

வருடத்தில் இருந்து வாதி தடத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் 1995ல் இருந்து விவசாயம் செய்து வருகிறார். அந்த இடத்தில் கம்பி வேலி போட்டு வைத்துள்ளார். மேற்படி தடத்தின் சுவாதீனம் எடுக்க எனது தந்தையோ நானோ நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

அ.வ.எண்.71/2013 வழக்கின் சொத்து விவரமும் இவ்வழக்கின் சொத்துவிவரமும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல ஒரே சொத்து விவரம் தான்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.02 17:27:22 +0530

District Munsif